செ.வெ.எண் : 964/2017 நாள்: 13.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஒகிபுயலால் பாதிக்கப்பட்ட மணக்குடி, கடியப்பட்டணம், குளச்சல் மீனவ கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு**

----

கன்னியாகுமரி மாவட்டம், ஒகிபுயலால் பாதிக்கப்பட்ட மணக்குடி, கடியப்பட்டணம், குளச்சல் மீனவ கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.12.17), மீன் பிடி தொழிலுக்கு சென்று காணாமல் போன மீனவர்களின் இல்லங்கலுக்குச் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில் :-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடி தொழிலுக்கு சென்று, ”ஒகி” புயலால் பாதிக்கப்பட்டு காணாமல் போன மீனவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. புயலினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இப்புயலினால் மீன்பிடித்தொழிலை செய்ய இயலாத நிலையினைக் கருத்தில் கொண்டு வாழ்வதாரம் இழந்த கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு கடந்த வருடத்தில் மீன்பிடி குறைந்த காலத்தில் நிவாரணத்தொகைக்கு விண்ணப்பித்து பயனடைந்த 30,778 மீனவ பயனாளிகளுக்கும் தலா ரூ.2500/-வீதம் ரூ.7,69,45,000/- (ஏழு கோடியே அறுபத்தி ஒன்பது லட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம்) அவரவர் வங்கிக் கணக்கில் NEFT மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கு இணங்க மேற்கண்ட பயனாளிகளுக்கு கூடுதலாக தலா ரூ.2500/- வீதம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க, புயலினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த மீனவர்கள் குடும்பங்களுக்கும் தலா ரூ.20 லட்சம் நிவாரண உதவி மற்றும் அவர்கள் குடும்பத்தில் ஒரு நபருக்கு அவர்களின் கல்வித்தகுதிக்கு ஏற்ப அரசு பணி வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாத இறுதியில் விண்ணப்பங்கள் பெற்று அதன் அடிப்படையில் ரூ.5000/- உதவித்தொகை வழங்கும் குறைந்த கால மீன்பிடி நிவாரணம் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில், ஒகி புயல் பாதிக்கப்பட்டதால் ஒகி புயலினால் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டதால் அரசு கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு உதவிடும் வகையில் முதற்கட்டமாக, கடந்த ஆண்டு பயனடைந்த 28,643 மீனவ பயனாளிகளுக்கு உடனடியாக ரூ.14,32,15,000 (பதினான்கு கோடியே முப்பத்தி இரண்டு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தியுள்ளது. இத்திட்டத்தில் கடந்த வருடம் புதிதாக சேர்ந்த 2135 மீனவர்களுக்கும் உடனடியாக நிவாரணத்தொகை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**